மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாச்சிப்பாளையம் பள்ளியின் பழைய கட்டடம் இடிக்கப்பட்டதால், புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு புதிய கட்டடங்களைக் கட்டுகின்ற நிதியிலே அது இணைக்கப்படும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, நீங்கள் ஒரு மூலக் கேள்வியும், 9 துணைக் கேள்விகளையும் இந்தக் கூட்டத் தொடரிலேயே கேட்டுவிட்டீர்கள். திரும்பவும் கை தூக்கிக் கொண்டிருந்தால், நான் என்ன செய்வது? உங்களுக்குப் பின்னால் இருக்கிற உறுப்பினர்களையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

172—

சிப்காட் தொழிற்சாலை

***7176—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி பகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைக்கும் பணியினைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிப்காட் நிறுவனம் நேரடியாக எந்தத் தொழிற்சாலையையும் அமைப்பதில்லை. நிலங்களைக் கையகப்படுத்தி தொழில் தொடங்குவதற்கேற்ப, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்பாடு செய்து, தொழில் வளாகங்களை உருவாக்கி சிப்காட் நிறுவனம் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கம். 'இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' என்ற பாடல் வரிகளுக்கேற்ப (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்ந்த, மன்னாதி மன்னன், மக்கள் திலகம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களையும், கழகத்தையும், தமிழகத்தையும் காத்திட்ட மக்களின் காவல் தெய்வமாய், நம் குல தெய்வமாய், வாழ்ந்து மறைந்திட்ட, இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆற்றல்மிகு அண்ணன் அவர்களையும் பணிவுடன் வணங்குகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2012–2013 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், உசிலம்பட்டி தொகுதி, சேடப்பட்டி ஒன்றியத்திலுள்ள பூசலபுரம் மற்றும் சவுடாரப்பட்டி பகுதிகளில் சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்கு அறிவிக்கப்பட்டது. அதிகாரிகள் பூசலபுரம் மற்றும் சவுடாரப்பட்டி பகுதிகளில் இடங்களைத் தேர்வு செய்து, ஆய்வுகள் செய்தனர். அத்துடன் அந்தத் திட்டம் அப்படியே நிலுவையில் இருக்கிறது. உசிலம்பட்டி தொகுதியிலுள்ள மக்கள் முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழ்கின்றார்கள். ஒன்று, மானாவாரியாக வருண பகவானை நம்பி வாழ வேண்டும்; இல்லையென்றால், அரசாங்கத்தை நம்பி வாழ வேண்டிய சூழ்நிலை. ஆகவே, தயவு செய்து உசிலம்பட்டி தொகுதி மக்களின் நலன் கருதி, நிலுவையிலுள்ள அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தித் தருமாறு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, பூசலபுரம் மற்றும் சவுடாரப்பட்டி பகுதிகளில் சிப்காட் அமைப்பதற்குண்டான

வழிவகைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். அதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு அருகில் சிப்காட் நிறுவனத்தின் மூலமாக புதிதாக ஒரு தொழில் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக திருமங்கலம் வட்டம், சிவரக்கோட்டை, சாமிமல்லம்பட்டி மற்றும் கரிசல்காளான்பட்டி ஆகிய கிராமங்களில் 1453.79 ஏக்கர் பட்டா நிலம் மற்றும் 24.92 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் என மொத்தம் 1478.71 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்த நிருவாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில் பூங்கா உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கு அருகில் அமைந்துள்ளதால் தொழில் முனைவோர்கள் எவரேனும் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அப்பூங்காக்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மனை, சிப்காட் நிறுவனத்தால் ஒதுக்கித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, இதுவரையில் எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத தொகுதியாக இருந்து வருகிறது. ஆகவே, தயவு செய்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கனிவாகப் பரிசீலித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று எங்கள் பகுதியில் தொழிற்சாலை ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று தொகுதி மக்களின் சார்பாகப் பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதிக்கு அருகில் திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தொழில் பூங்கா அரசின் மூலமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. உசிலம்பட்டி பகுதியிலிருந்து

தொழில் முனைவோர்கள் எவரேனும் தொழில் தொடங்க முன்வந்தால், அதற்குண்டான நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசினுடைய சலுகைகளும் வழங்கப்பட்டு, தொழில் தொடங்குவதற்கான வழிவகைகளை அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை உருவாக்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், பல்வேறு சிறப்புக்குரிய திட்டங்களைச் செயலாற்றுகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில் மாநகர் என்ற புகழுக்குரிய மதுரை; தமிழ்ச் சங்கம் கண்ட மதுரை; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு புகழ் சேர்த்த மதுரை; நூற்பாலை நகர் என்று கூறப்பட்ட மதுரை; தென்கொரியா மட்டுமல்ல மேலை நாடுகளில் மதுரை கிரானைட் என்று சொல்லப்படுகின்ற அளவிற்கு, கிரானைட்டிற்கு புகழ்பெற்றது மதுரை. ஆனால், இன்றைக்கு எந்த பெருந்தொழிலும் இல்லாத சூழ்நிலை. ஒன்றிரண்டு நூற்பாலைகளைத் தவிர அனைத்து நூற்பாலைகளும் மூடப்பட்ட சூழ்நிலை. வழக்குக் காரணமாக கிரானைட் தொழிலும் முடக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை. பூக்கள் விளைந்து வந்தாலும் திரவியத் தொழிற்சாலை இல்லாத சூழ்நிலை. ஆட்டோ, கார்கள் விற்பனை அதிகரித்தும் கார்கள் உற்பத்தி நிலையம் இல்லாத சூழ்நிலை. அரசின் சார்பாக ஏதேனும் ஒரு தொழிற்சாலை மதுரையில் தொடங்கப்பட்டால்தான், தனியார் தொழில் முனைவோர் அந்தத் தொழிலையொட்டி பிற தொழில்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, முடக்கப்பட்ட மிசேரியர் கூட்டுறவு நூற்பாலையைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவரவும்; அரசின் சார்பில் திரவியத் தொழிற்சாலையைக் கொண்டுவரவும்; வழக்கின் காரணமாக கிரானைட் தனியார் தொழிற்சாலை முடக்கப்பட்ட சூழ்நிலையில், அதனை அரசுடைமையாக்கி, மதுரைக்கு புகழ் சேர்க்கின்ற கிரானைட் உற்பத்தித் தொழிற்சாலைகளைக் கொண்டுவரவும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முனைப்புடன்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. நீதிபதி அவர்கள் குறிப்பிட்டதைப்போல உசிலம்பட்டி தொகுதி, பூசலபுரம் பகுதியில் ஏற்கெனவே நிலங்கள் அடையாளம் கண்டறியப்பட்டுள்ளன. முன்னாள் சிப்காட் நிருவாக இயக்குநர் திருமிகு ராஜேந்திரன் அவர்கள் அதற்கான அடையாளங்களையெல்லாம் கண்டறிந்திருக்கிறார். எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி அந்த சிப்காட்டையாவது அங்கு கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிப்காட் அமைக்க உசிலம்பட்டி தொகுதியில் பூசலபுரம் பகுதியில் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கிரானைட் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். கிரானைட் பொறுத்தவரை கிரானைட் பாலிசி இருக்கின்றது, மேலும், இது நீதிமன்ற வழக்கில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கடுத்து நூற்பாலை பற்றி குறிப்பிட்டார்கள். நூற்பாலை பொறுத்தவரை, அதன் நிலைமை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடம் உள்ளதால் அதனையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைக் குறிப்பிடுகிறேன். மேலும், வாசனைத் திரவியத் தொழிற்சாலை கேட்டார்கள். மல்லிகைப் பூ கிலோ ஒன்றுக்கு ரூ.150, ரூ.160 என அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றது. தற்போது இருக்கின்ற நிலையில் அந்த அளவிற்கு பூ கிடைக்குமா என்ற சூழ்நிலையில், இதுவும் சிறு தொழிலில் வரும். இருந்தாலும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பரிசீலனை செய்து அதற்குண்டான வழிவகைகளைக் காண அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.